දුරකථන ) 2698475
தொலைபேசி ) 2698490
Telephone ) 2698507

ෆැක්ස් ) 2692913
பெக்ஸ் ) 2694860
Fax )

විද්‍යුත් තැපෑල )
மின்னஞ்சல் முகவரி ) postmaster@health.gov.lk
E-mail )

වෙබ්අඩවිය )
இணையத்தளம் ) www.health.gov.lk
Website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல )FHB/SH/Let/2021
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. )

දිනය )
திகதி )2021.02. 15
Date )

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
**Ministry of Health**

---

பேராசிரியர் கபில பெரேரா,

செயலாளர்,

கல்வி அமைச்சு

**COVID-19 காலகட்டத்தில் தேசிய பரீட்சைகளை நடத்துவதற்கான வழிகாட்டல்**

இந்த வழிகாட்டல், மே 2020 இல் வெளியிடப்பட்ட "தேர்ந்தெடுக்கப்பட்ட பொது நடவடிக்கைகளில் / வேலைத்தளங்களில் COVID - 19 தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான வழிகாட்டல்கள் - தேர்வுகளை நடத்துதல்" என்பதற்கு மேலதிகமானது.

இந்த வழிகாட்டல், கல்வி அமைச்சின் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் க.பொ.த சாதாரண தர பரீட்சையை (GCE (O/L)) விசேட இலக்காகக் கொண்டது. மேலும் பொதுமக்களுக்கான, COVID - 19 தடுப்பதற்கான பொதுவான வழிகாட்டலையும் பார்க்கவும்.

**பொது நடவடிக்கைகள்**

1. அனைத்து அவசரகால சூழ்நிலைகளையும் கையாள 24 மணிநேரம் செயல்படும் ஒரு தேசிய அளவிலான ஒருங்கிணைப்பு நிலையம் நிறுவப்பட வேண்டும்.
2. பரீட்சைக்கு தகுதி பெற்ற மாணவர்களின் பிரசன்னம் தேவைப்படும் அனைத்து பாடசாலை நடவடிக்கைகளும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை தொடங்குவதற்கு **இரண்டு வாரங்களுக்கு முன்பே** நிறைவு செய்யப்பட வேண்டும்.

**குறிப்பிட்ட செய்தி / அறிவுறுத்தல்கள்**

**பரீட்சை ஏற்பாட்டாளருக்கு / அமைப்பாளருக்கு**

1. தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா மற்றும் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்த ஒவ்வொரு பரீட்சை நிலையத்திற்கும் ஒரு பொறுப்பான அதிகாரியை நியமிக்கவும்,.
2. சம்பந்தப்பட்ட அனைத்து ஊழியர்களுக்கும் COVID-19 தடுப்பு, தனிநபர் பாதுகாப்பு மற்றும் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள், சவர்க்காரமிட்டு நீரினால் கைகளை சரியாக கழுவுதல், நபர்களுக்கிடையிலான தூரத்தை பேணுதல் (முடியுமான போதெல்லாம்) முகவுறையை மற்றும் சிறந்த சுவாச நடைமுறைகள் (தும்மும் போதும் /

இருமும் போதும் முழங்கையால் வாய் மற்றும் மூக்கை மூடுதல்) என்பன தொடர்பாக விழிப்புணர்வை / அறிவுறுத்தல்கள் வழங்கப்படல் வேண்டும்.

3. அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களும் தாங்கள் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள வீட்டிலிருந்தோ அல்லது முடக்கப்பட்டுள்ள பிரதேசத்திலிருந்து வரவில்லை என்பதனை உறுதிப்படுத்தும் படிவத்தையும் தங்களது பெயர், முகவரி மற்றும் சுகாதார நிலை தொடர்பாக தகவல்களை வழங்க வேண்டும்.
4. தேர்வில் கலந்து கொள்ளும் அனைத்து பரீட்சாத்திகளினதும் பெயர், அவர்களின் தொலைபேசி இலக்கம், முகவரி, தேசிய அடையாள அட்டை எண், பரீட்சை நிலையம் மற்றும் அவர்கள் தோற்றவுள்ள பாடங்கள் தொடர்பாக தரவுத்தளம் பேணுதல்.
5. பரீட்சைக்கு முன்னர் COVID-19 தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அனைத்து பரீட்சாத்திகளுக்கும் தெரிவிக்கவும், அதனை மீண்டும் அறிவிப்புகள் (notice) / அடையாளங்கள் மூலம் பரீட்சை நிலையத்தில் அறிவிக்கப்படல் வேண்டும்.
6. a. COVID 19 தொடர்புடைய சந்தேகங்களை கேட்பதற்கும் மற்றும் காய்ச்சல் / சுவாச அறிகுறிகளை முன்னதாகவே தெரிவிப்பதற்கும் தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கும், பரீட்சாத்திகள் அழைக்க வேண்டிய ஒரு துரித அழைப்பு இலக்கம் (hotline) வழங்கப்படல் வேண்டும்.

   b. ஒரு பரீட்சாத்தி **COVID-19 இருப்பதாக கண்டறியப்பட்டால்,** அவர்கள் தெரிவு செய்யப்பட்ட மருத்துவமனை / சிகிச்சை நிலையத்திற்கு அனுமதிக்கப்பட வேண்டும். வைத்தியசாலைப் பணிப்பாளர் / வைத்தியசாலை அத்தியட்சகர் / வைத்திய பொறுப்பதிகாரி **பரீட்சையை நடத்த தனியான ஒரு இடத்தை தயார் செய்ய** தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் . வைத்தியசாலை / சிகிச்சை நிலையத்தில் பரீட்சை நடத்துவதற்கு கல்வி அதிகாரிகள் ஒருங்கிணைந்து ஆதரவளிக்க வேண்டும்.

   c. **ஒரு பரீட்சாத்திக்கு COVID-19 சந்தேகிக்கும் அறிகுறிகளுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டால்,** வைத்தியசாலைப் பணிப்பாளர் / வைத்தியசாலை அத்தியட்சகர் / வைத்திய பொறுப்பதிகாரி **பரீட்சையை நடத்த தனியான ஒரு இடத்தை தயார் செய்ய** தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

   d. பரீட்சை நேரத்தில் ஒரு பரீட்சாத்தி தனிமைப்படுத்தப்பட்டிருந்தால் அல்லது முடக்கப்பட்ட பிரதேசத்தில் இருந்தால், பரீட்சையை நடத்த ஒரு தனி பரீட்சை நிலையம் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இருப்பினும், முடக்கப்பட்ட பிரதேசத்தில் மிகக் குறைவான பரீட்சாத்திகளே இருந்தால், அருகிலுள்ள பரீட்சை நிலையத்தில் ஒரு தனி கட்டிடத்தில் பரீட்சை ஏற்பாடு செய்யப்படலாம். தேர்வில் கலந்துகொள்ள மாத்திரம் முடக்கப்பட்ட பிரதேசத்தை விட்டு வெளியே செல்லவதற்கான அனுமதிக்காக, பரீட்சை அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்த முடியும்.

   e. பரீட்சாத்தி பரீட்சை நிலையத்திற்கு வருகை தந்த பின்னர், COVID-19 தொடர்பான அறிகுறிகளைப் காண்பித்தால், ஒவ்வொரு பரீட்சை நிலையத்திலும் தனிமைப்படுத்தல் அறை (quarantine room) ஒதுக்கப்பட வேண்டும், அங்கு அந்த குறிப்பிட்ட நாளில் வேட்பாளர் பரீட்சையை தொடர வேண்டும். அறிகுறிகளுள்ள மாணவரை பரீட்சை மண்டபத்திலுள்ள ஏனைய மாணவர்களிடமிருந்து தனிமைப்படுத்தும் போது அனைத்து முன்னெச்சரிக்கைகளும் பின்பற்றப்பட வேண்டும், நோயறிகுறிகளுள்ள மாணவர் பரீட்சையை முடிப்பதை உறுதி செய்ய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும்.

   f. முடக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்வதற்கு கல்வி அதிகாரிகள், ஏனைய அரச அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

   g. வைத்தியசாலைகள் / சிகிச்சை நிலையங்கள் / தனிமைப்படுத்தல் நிலையங்கள் மற்றும் முடக்கப்பட்ட பகுதிகளில் கடமையில் உள்ள பரீட்சை அதிகாரிகளுக்கு நோய்ப் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும்.

   h. மருத்துவமனை அமைப்பில் பரீட்சை நடத்தும்போது, தேவைப்பட்டால், சுகாதார ஊழியர்களை பரீட்சை மேற்பார்வையாளர்களாக (invigilators) பணியாற்ற அனுமதிக்க வேண்டும்.

7. பரீட்சை நிலையத்தினுள் நுழையும் மற்றும் வெளியேறும் செயற்பாடானது நெறிப்படுத்தப்பட வேண்டும் மேலும் போதுமான கை கழுவும், பதிவு செய்யும் மற்றும் பொதிகளை வைத்துச் செல்லும் இடங்களை நிறுவுவதன் மூலமாக நெரிசலினை தடுக்க முடியும்.
8. பரீட்சை மண்டபத்தின் நுழைவாயிலில் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சவர்க்காரமிட்டு நீரினால் கை கழுவுவதற்கான வசதிகளை (கால் இயக்கப்படும் அல்லது தானாக இயங்கும் நீர்க்குழாய் விரும்பத்தக்கது) ஏற்பாடு செய்யு வேண்டும். இது போன்ற வசதிகளை வழங்கப்பட முடியாது, என்றால் நுழைவாயிலில் மதுசாரம் சார்ந்த கை சுத்தம் செய்யும் திரவம் (hand sanitizer) வைக்கப்பட வேண்டும். அனைத்து பரீட்சாத்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் நுழையும் முன் கைகளை சுத்தம் செய்யு வேண்டும். மேலே உள்ள செயற்பாடுகள் சரியாக செய்யப்படுவதனை உறுதி செய்ய ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட வேண்டும்.
9. ஊழியர்களினதும் மற்றும் பரீட்சாத்திகளினதும் சுகாதார நிலையை விசாரிக்க நுழைவிடத்தில் ஒரு அமைப்புமுறையை பின்பற்றவும்.
10. காய்ச்சலைச் இருப்பதனை பரிசோதிக்க வெப்பமானிகள் பயன்படுத்தப்படலாம், ஆனால் அவை அத்தியாவசியமில்லை. நுழைவாயிலில் வெப்பநிலை அளக்க வேண்டியிருந்தால் தொடுகையற்ற infra-red வெப்பமானிகள் விரும்பத்தக்கது. ஊழியர்கள் இதனைப் சரியாக பயன்படுத்த பயிற்சியளிக்கப்பட வேண்டும்.
11. ஒரு ஊழியர் காய்ச்சல் / சுவாச அறிகுறிகள் ஏற்படுமிடத்து பரீட்சை நிலையத்திற்கு கடமைக்கு வரக்கூடாது. வேறு நபரை கடமைக்கு ஏற்பாடு செய்ய, அவர்கள் பிரதான பரீட்சை மேற்பார்வையாளரிடம் அறிவிக்க வேண்டும்.
12. பரீட்சை மண்டபங்கள் பரீட்சை ஆரம்பிப்பதற்கும் முன்னரும் முடிவடைந்த பின்னரும் பெருத்தமாயின் இடையிலும் கிருமி நீக்கம் செய்யப்படல் வேண்டும். மேசைகள், கதவு கைபிடிகள், மாடிப்படி கைபிடிகள், மின்உயர்த்தி பொத்தான்கள் மற்றும் ஏனைய பொதுவாக தொடப்படும் மேற்பரப்புகளும் உள்ளடங்கும்.
13. வரவு பதிவுசெய்வதற்கு மாணவர்கள் தங்களது பேனாக்களை பயன்படுத்த வேண்டும்
14. பரீட்சாத்திகள் முகவுறையை சரியாக அணிய வேண்டும் பரீட்சையின் போதும் அணிய வேண்டும். பரீட்சை மேற்பார்வையாளர்களும் முகவுறையை பரீட்சை செயற்பாடு முழுவதும் அணிய வேண்டும்.
15. திசுக்கள், மற்றும் பாவித்த பொருட்களை அகற்றுவதற்காக மூடியுடன் கூடிய கழிவுத்தொட்டி வழங்கப்படல் வேண்டும்.
16. முடிந்தவரை தேர்வு மண்டபத்தை நன்கு காற்றோட்டமாக வைத்திருங்கள் . மண்டபத்தில் முறையான இயற்கை காற்றோட்டம் இருத்தல் விரும்பப்படுகிறது. வளிச்சீராக்கிகளை இயலுமானவரை தவிர்க்கவும்.
17. பரீட்சாத்திகள் கதவு கைபிடிகளைத் தொடுவதனைத் தவிர்ப்பதற்காக பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்னரும் முடிவடைந்த பின்னரும் பரீட்சை மண்டப கதவுகளைத் திறந்து வைக்கவும்.
18. ஒவ்வொரு பரீட்சாத்திகளின் மேசைகளுக்குமிடையில் இடையில் குறைந்தபட்சம் ஒரு மீட்டர் தூரம் இருக்க வேண்டும்
19. நபர்களுக்கிடையில் கடதாசிகள் அல்லது உபகரணங்களைப் பரிமாறுவதனைத் தவிர்க்கவும் (கணிப்பான், மடக்கை அட்டவணை போன்றன)
20. பரீட்சாத்திகளை தங்களது சொந்த தண்ணீர் போத்தல்களை கொண்டு வர வேண்டும் அல்லது பாவித்து வீசுகின்ற நீர் கோப்பைகள் வழங்கப்பட வேண்டும்.
21. இடைவேளைகளின் போது மாணவர்கள் ஒவ்வொருவருடனும் சேர்வதனையும் உணவு மற்றும் பானம் போன்றவற்றை பகிர்ந்து கொள்ளவும் அனுமதிக்கக்கூடாது.

22. **செய்முறைப் பரீட்சைகள் / வாய்மொழித் தேர்வு / நேர்முகப் பரீட்சைகளை நடத்துதல்**
   a. செய்முறைப் பரீட்சைகளுக்காக மாணவர்கள் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களுக்கு அனுப்பக்கூடாது.
   b. செய்முறைப்பரீட்சை என்றால் பொதுவான மேற்பரப்புகளை / உபகரணங்களை தொடுவதனை குறைப்பதற்கான விதத்தில் செய்யப்படல் வேண்டும். (உதாரணமாக வினாக்கள் பிரதி எடுக்கப்பட்ட தாள் பயன்படுத்துவதற்கு பதிலாக வினாக்களை திரையில் காண்பிக்க முடியும். படவில்லைகளைக் (slides) காண்பிக்கநுணுக்குக்காட்டிக்கு பதிலாக திரையில் காண்பிக்க முடியும்). செய்முறைப்

பரீட்சைகளின் போது அனைத்து உபகரணங்களையும் பரீட்சாத்தி பாவித்து அடுத்தவர் பாவிக்க முன்னர் கிருமிநீக்கம் செய்யப்படல் வேண்டும்.

c. செய்முறைப் பரீட்சைகள் / வாய்மொழித் தேர்வு / நேர்முகப் பரீட்சை போன்றவற்றின் போது பரீட்சாத்தி மற்றும் தேர்வாளர் முகவுறை அணிய வேண்டும். முகவுறையுடன் செய்ய முடியாத செய்முறைப் பரீட்சைகளின் போது இரண்டு மீற்றர் இடைவெளியினைப் பேணுவதுடன் நன்கு காற்றோட்டமான இடத்தில் நடத்தப்பட வேண்டும்.

d. காய்ச்சல் / சுவாச அறிகுறிகள் உள்ள பரீட்சாத்திகள் எப்போதும் முகவுறை அணிய அறிவுறுத்தப்பட வேண்டும். அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட பகுதிக்கு அனுப்பப்பட வேண்டும். வாய்மொழிப் பரீட்சை, செய்முறைப் பரீட்சைகள்போன்ற பரீட்சைகளை பரீட்சாத்திக்கு தீமை ஏற்படாதவிதத்தில் அவர்களுக்கு வசதியான தினத்திற்கு இயலுமானால் பிற்போடவும்.

**பெற்றோர் / பாதுகாவலர்களுக்கு**

1. உங்கள் குழந்தையைப் COVID 19 இருப்பதற்கான அறிகுறிகளான காய்ச்சல் இருமல் அல்லது தொண்டை வலி போன்றவை பரீட்சை காலத்தில் காணப்படுமாயின் சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனையைப் பெற வேண்டும்.
2. உங்கள் பிள்ளை COVID -19 தொற்றுக்கு உள்ளானால் அல்லது தனிமைப்படுத்தப்பட்டால் உங்கள் பிரதேச PHI / MOH இன் அறிவுறுத்தல்களைக் பின்பற்ற வேண்டும்.
3. நீங்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தால், உங்கள் பிள்ளை பரீட்சை நிலையத்திற்கு செல்வதற்கான போக்குவரத்தை ஏற்பாடு செய்வதில் சிரமம் இருந்தால், உதவிகளைப் பெற பிரதேச செயலாளருக்கு அல்லது பாடசாலை அதிபருக்கு தெரிவிக்கலாம்.

**பரீட்சாத்திகளுக்கு**

1. பாடசாலை அதிபருக்கு / சுகாதார வைத்திய அதிகாரிக்கு சரியான தொடர்பு விவரங்களை வழங்குதல்.
2. நிலையத்தால் கோவிட் 19 தடுப்பு தொடர்பாக வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும். இதில் பின்வருவன அடங்கும்:
   - சுவாச ஒழுங்குமுறைகள் (இருமல் அல்லது தும்மும் போது முழங்கையின் உள்பக்கத்தினால் மூடவும்)
   - கைகளை சவர்காரமிட்டு நீரினால் முறையாக கழுவுதல்
   - மூக்கையும் வாயையும் மூடும் விதமாக முகவுறையைச் சரியாக அணிதல்
   - உங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் எல்லா நேரங்களிலும் குறைந்தது ஒரு மீட்டர் தூரம் பேணப்படுவதை உறுதிசெய்தல்
   - பொதுவான இடங்களில் கூட்டமாக இருத்தலை தவிர்த்தல் - நுழைவாயில், பதிவு மேசை, கை கழுவும் இடம் மற்றும் சிற்றுண்டிச்சாலை
   - ஒன்றாக சாப்பிட வேண்டாம் அல்லது உணவை பகிர்ந்து கொள்ள வேண்டாம். நீங்கள் சாப்பிடும்போது நபர்களுக்கிடையில் இரண்டு மீட்டர் தூரம் இருக்க வேண்டும்.
   - அனுமதி வழங்கப்பட்டால் மற்றும் முடிந்தவரை உங்கள் சொந்த உபகரணங்களை (உதாரணமாக: கணிப்பான்) கொண்டு வாருங்கள் .
   - தேர்வுக்கு முன்னும் பின்னும் வளாகத்தில் தேவையில்லாமல் அதிக நேரம் இருக்க வேண்டாம்.
3. பரீட்சையின் போது காய்ச்சல், இருமல், தொண்டை வலி ஏற்படுமாயின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் அறிவிக்கவும். பரீட்சைக்கு முன்னதாக நோயறிகுறிகள் ஏற்பட்டால் சுகாதார வைத்திய அதிகாரிக்கு / பாடசாலை அதிபருக்கு அறிவிக்க வேண்டும். எனவே பொருத்தமான ஏற்பாடுகளை செய்ய முடியும்.
4. காய்ச்சல் / சுவாச அறிகுறிகள் உள்ள பரீட்சாத்திகள் எப்போதும் முகவுறையை அணிந்திருப்பதுடன் தங்களுக்கென தனியாக ஒதுக்கப்பட்ட தனிமைப்படுதல் அறையிலிருந்து பரீட்சை மேற்கொள்ள வேண்டும்.

5. ஒரு மாணவர் கோவிட் இருப்பதாக இனங்காணப்பட்டால், அந்த மாணவர் ஒரு மருத்துவமனை / சிகிச்சை மையத்திற்கு மாற்றப்படுவார், மேலும் அந்த மாணவன் மருத்துவமனையில் தேர்வுக்கு அமர முடியும். மாணவர் தனது புத்தகங்களை மருத்துவமனை / சிகிச்சை மையத்திற்கு எடுத்துச் செல்லலாம்.

**அறிவுறுத்தலின் முறை**

அனைத்து பரீட்சாத்திகளுக்கும் நிறுவனங்கள் / அமைப்புகளால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

எடுக்க வேண்டிய COVID-19 தடுப்பு நடவடிக்கைகளை குறிக்கும் அறிவிப்பு (notice) / கையொப்பங்கள் (signages) பரீட்சை நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் (முகமூடி அணிதல், பயணத்திற்கு முன்னும் பின்னும் கைகளை கழுவுதல், நபர்களுக்கிடையில் குறைந்தபட்சம் ஒரு மீட்டர் தூரத்தையாவது பேணுதல், சிறந்த சுவாச நடைமுறை)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை உங்கள் அமைச்சில் / திணைக்களங்களிலுள்ள உங்களின் கீழுள்ள அதிகாரிகளுக்கும் அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்

வைத்தியர் அசேல குணவர்தன
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

**Dr. ASELA GUNAWARDENA**
Director General of Health Services
Ministry of Health
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

**பிரதிகள்:**

செயலாளர் / சுகாதார அமைச்சு

மேலதிக செயலாளர் / பொது சுகாதாரம் / சுகாதார அமைச்சு

மேலதிக செயலாளர் / பாடசாலை செயற்பாடுகள் / கல்வி அமைச்சு

பரீட்சைகள் ஆணையாளர், பரீட்சைகள் திணைக்களம், கல்வி அமைச்சு

பிரதிப் பணிப்பாளர் நாயகம் பொதுச் சுகாதாரம் I மற்றும் II

தலைமை தொற்றுநோயியல் நிபுணர்

பணிப்பாளர் / தாய் மற்றும் சேய் சுகாதாரம்

பணிப்பாளர் / சுகாதார மேம்பாட்டு பணியகம்

பணிப்பாளர் / கல்வி, சுகாதாரம் மற்றும் போசணை / கல்வி அமைச்சு

அனைத்து மாகாண பிரதான செயலாளர்கள்

அனைத்து மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

அனைத்து மாவட்ட செயலாளர்கள்

அனைத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

அனைத்து மாகாண மற்றும் மாவட்ட சமுதாய வைத்திய நிபுணர்கள்

அனைத்து வைத்திய அதிகாரிகள் - தாய் சேய் நலன்

அனைத்து பிராந்திய தொற்றுநோயியல் வைத்திய அதிகாரிகள்

அனைத்து சுகாதார வைத்திய அதிகாரிகள்